**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 280-2019 |
| Deposition of Witness | : | PW-8 |
| Name | : | துரைசாமி |
| Father Name | : | தங்கமுத்து |
| Village | : | வாய்பாடி |
| Taluk | : | பெருந்துறை |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24.09.2025
**Accused absent.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது திருப்பூர் மாவட்டம் சேயூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.07.2018-ம் தேதி ஊத்துக்குளி காவல் நிலைய உதவி ஆய்வாளராக நான் நிலைய பணியில் இருந்தபோது திருப்பூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் சிறப்பு உதவி ஆய்வாளர் பழனிசாமி என்பவர் சிகிச்சையில் இருந்த திவ்யா என்பவரிடம் திருப்பூர் அரசு மருத்துவமனையில் வைத்து வாக்குமூலம் பதிவு செய்து ஊத்துக்குளி காவல் நிலைய குற்ற எண் 284/2018 சட்டப்பிரிவு 294(b), 323, 324, 354(c), 506(2) IPC and 4 of TNPHW Act -ன் கீழ் வழக்கு பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்தார். **(முதல் தகவல் அறிக்கை அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. இவ்வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 08.07.2018-ம் தேதி இரவு 08.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பட்டியல் சாட்சிகள் 5 பழனிசாமி மற்றும் 6 வெள்ளிங்கிரி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பின்பு இரவு 08.30 மணிக்கு அதே சாட்சிகள்

முன்னிலையில் எதிரிகள் வாதியை அடிக்க பயன்படுத்திய உடைந்த நிலையில் கிடந்த பீர் பாட்டில் மற்றும் தென்னம்மட்டையை படிவம் 91–ல் கைப்பற்றினேன். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.8 ஆகவும் வரைபடம் அ.சா.ஆ.9 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்பு சாட்சிகள் திவ்யா, பழனிசாமி, கன்னுக்குட்டி, இரங்கசாமி, பழனிசாமி, வெள்ளிங்கிரி ஆகிய 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. 09.07.2018– ம் தேதி வழக்கின் 1–ம் எதிரி கோவிந்தசாமியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 19.07.2018– ம் தேதி வழக்கின் 2–ம் எதிரி ஜமுனாராணி திருப்பூர் மாவட்ட நீதிமன்றத்தில் Crmp.No. 1173/2018–ன் படி முன்ஜாமின் பெற்றதால் அவரை கைது செய்யவில்லை.

5. 07.08.2018–ம் தேதி வழக்கு சொத்துக்களை PR.NO. 136/2018–ன் படி அவினாசி உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். 09.08.2018–ம் தேதி வாதிக்கு சிகிச்சை அளித்த ஊத்துக்குளி அரசு மருத்துவர் மோகன்ராஜ் என்பவரிடம் காயச்சான்று பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

6. அன்றைய தினமே புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 354(c), 506(2) IPC and 4 of TNPHW Act–ன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.09.24 20:19:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.